Washermen residing on the Embankments of the Vaigai River.

* 10. *Q.*—THIRU C. R. KOLAPPA : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether there is any proposal with the Government to provide alternative places for the poor washermen residing on the embankments of the Vaigai river?

வைகை ஆற்றின் ஓரங்களில் குடியிருக்கும் சலவைத் தொழிலாளர்கள்

திரு. சி. ஆர். கோலப்பா : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

வைகை ஆற்றின் ஓரங்களில் குடியிருக்கும் ஏழை சலவைத் தொழிலாளர்களை வேறு இடங்களில் குடியேற்ற அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மதுரை மாவட்டத்தில் வைகை நதியின் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட சலவைத் தொழிலாளர்களில் 185 குடும்பங்களுக்கு மதுரை வடக்கு வட்டம் சத்திமங்கலம் கிராமத்திலும், 80 குடும்பங்களுக்கு மதுரை தெற்கு வட்டம் கீழ்மதிகாட்டினான் கிராமத்திலும் வீட்டிமாற்று இடம் கொடுக்கப்பட்டது. இதுபோல மேலும் மாற்று இடம் கேட்டு மனுக்கள் வந்தால் மாவட்ட அலுவலர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள்.

திரு. சி. ஆர். கோலப்பா : தலைவர் அவர்களே, சென்னை சைதாப்பேட்டையிலும், திருச்சி கொள்ளிடம், காவிரிக்கரையிலும் இது போல் பல விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இதுபோல் வேறு இடங்களுக்குக் குடியேற வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அவர்களும் வேறு இடங்களுக்குப் போக வேண்டுமென்று கேட்டு விண்ணப்பித்துக் கொண்டால், அரசு பரிசீலிக்கும்.

THIRU D. SANTOSHAM : Apart from providing the washermen with residential facilities, will the Government consider the desirability of providing them with better working facilities through a dhobkana so that they may not come across dangerous accidents in future by the side of the rivers?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அவ்வப்போது நிலைமைக்கு எற்ப அரசாங்கம் உதவி செய்ய முன்வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.